குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 25-2026

அ.சா. **5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. மோகனசுந்தரம் (SI of Police Shoolagiri PS) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பொன்னுதுரை |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| வயது | : | 37 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 10.03.2026**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சூளகிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். சூளகிரி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 417/2025 வழக்கு CC.No. 25/2026 ஆக நிலுவையில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும். காவல் உதவி ஆய்வாளர் அசோக்குமார் மற்றும் காவல் ஆய்வாளர் சையத் சுல்தான்

பாஷாஆகியோருடன் நான் பணிப்புரிந்து உள்ளதால் அவர்களது கையெழுத்து எனக்கு நன்கு அறிமுகம் என்பதாலும் இவ்வழக்கில் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.10.2025ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் அசோக்குமார் நிலைய பொறுப்பில் இருந்த போது கிருஷ்ணக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 417/2025 BNS பிரிவுகள் 281, 125(A) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **புகார்தாரர் அளித்த புகார் மனு அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே நாள் காலை 11.30 மணிக்கு ஒசூர் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் கோபசந்திரம் வன அலுவலகம் அருகே விபத்து நடந்த சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராமப்பா மற்றும் சக்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் பார்வைிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும் மற்றும் மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** ஒசூர் காவேரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த புகார்தாரரின் தாயார் 05.10.2025ம் தேதி சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார் என்ற தகவலை பெற்று வழக்கின் சட்டப்பிரிவு 281, 106(1) BNS கீழ் மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார் **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் இறந்த ஞானசுந்தரி என்பவரின் உடலின் மீது பஞ்சாய்த்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சிகள் கிருஷ்ணகுமார், ஓம்பிரகாஷ், வசந்தகுமார், மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனிதனியே

வாக்குமூலம் பதிவு செய்தார். 03.11.2025ம் தேதி சூளகிரியில் 10.00 மணிக்கு எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்கநிலைய பிணையில் விடுவித்தார். வழக்கின் கோப்பை தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் சையத் சுல்தான் பாஷா என்பவர் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் தண்டர்சீப் என்பவரை விசாரித்து பெறப்பட்ட **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கு விபத்தில் தொடர்புடைய வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பித்த மோட்டார் வாகன ஆய்வாளர் விஜயகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து ஆய்வறிக்கையை பெற்றார். இருச்சக்கர **வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** விபத்தில் காயம் அடைந்த ஞானசுந்தரி முளைசாவு அடைந்துவிட்டார் என உறுதி செய்த மருத்துவர் பிரசாந்த் துரைசாமி, பிரேத பரிசோதனை அலுவல் பார்த்த தலைமை காவலர் ராமமூர்த்தி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கை பற்றிய விவரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். புகார் மனுவிலும் முதல் தகவல் அறிக்கையிலும் எதிரி ஓட்டி சென்றதாக சொல்லப்படும் இருச்சக்கர வாகனத்தின் டயர் தீடீரென வெடித்ததால் விபத்து ஏற்ப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு விபத்து நடந்தாக சொல்லப்படும் நாளில் எங்களுக்கு தகவல் எதுவும் அளிக்கப்படவில்லை

என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 ஆகியோர் இறந்த நபரின் உறவினர்கள் எனறால் சரியல்ல. அ.சா.1 னிடம் எழுதப்படாத வெத்து தாளில் போலிசார் கையெழுத்து வாங்கி கொண்டதாக புலன்விசாரணை அதிகாரியின் விசாரணையில் சொல்லி உள்ளார் என்றால் இல்லை. அ.சா.3 மற்றும் 4 ஆகியோர் போலிசார் விசாரணையில் காவல் நியைலத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக சொல்லி உள்ளார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. சம்பவயிட சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் விசாரணை செய்யவில்லை. வழக்கு விபத்தானது இருச்சக்கர வாகனத்தின் டயர் வெடித்தால் மட்டுமே ஏற்பட்டது என்றாலும் எதிரியின் ஆஜக்கிரதையலோ அதிவேகமான செயலலோ ஏற்படவில்லை என்றால் சரிதான். வழக்கின் புலன் விசாரணை அதிகாரி முறையான விசாரணை மேற்கொள்ளாமல் எதிரியின் மீது பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**